# நூலகத்தை உபயோகிப்பதில் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாடு : ஓர் மதிப்பீட்டாய்வு (இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு)

**MS. Zunoomy** [(1)], **FHA.Shibly** [(2)], **APM. Asan** [(3)]

[(1), (2) & (3)] Department of Arabic Language,
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
shiblyfh@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பு செய்பவைகளாக நூலகங்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக நாட்டிற்கு சேவை செய்யும் புத்திஜீவிகளை உருவாக்கும் பல்கலைக்கழகங்கள் நூலகத்தை சுமந்திருப்பது அத்தியவசியமானதொன்றாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு துணைபுரிதல், அறிவை பெற்று வழங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக பல்கலைக்கழகங்களில் நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. எனினும் அவற்றின் மூலம் மாணவர்கள் பூரண பயனடைவது பற்றி மீள் பரிசீலனை செய்வது காலத்தின் நிர்ப்பந்தமாகி விட்டது. இத்தோரணையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொது நூலகத்தை மையப்படுத்தி மாணவர்களுக்கும், நூலகத்திற்கும் இடையிலான தொடர்பை வெளிக்கொண்டுவரும் முகமாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு பல்கலைக்கழகத்தை சேர்ந்த முன்னூறு மாணவர்கள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். இதில் முதல் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம், நேர்காணல் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இரண்டாம் நிலைத்தரவுகள் நூற்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. இவ்வாய்வின் தரவுகள் அனைத்தும் எம்.எஸ். எக்ஸல் (MS Excel) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பொது நூலகத்துடனான மாணவர்களின் தொடர்பை வெளிக்கொண்டு வருதல், சிறந்த முறையில் நூலகத்தை பயன்படுத்த வழிகாட்டல் வழங்குதல் ஆகிய இரு பிரதான நோக்கங்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலகத்தை பயன்படுத்துவது அவசியம், நூலக வசதிகள் திருப்திகரமான உள்ளது, கற்றலுக்கான சூழல் கிடைக்கப்பெறுகின்றது போன்றவற்றை மாணவர்கள் ஏற்றுக்கொண்டாலும் நூலகத்தில் நேரம் செலவிடுவதில், நூலகத்திற்கு வருகை தருவதில், நூற்களை அதிகம் இரவல் பெறுவதில் அவர்கள் கவனயீனமாக செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது பொது நூலகம் கற்றலுக்கான வசதிகளை போதியளவு கொண்டிருப்பினும் அதனை பயன்படுத்தி பிரயோசனமடைவதை விட்டும் மாணவர்கள் கவனயீனமாக உள்ளனர் என்பதை இவ்வாய்வின் முடிவாக எடுத்துக்கொள்ளலாம். மாணவர்களை விழிப்புணர்வு பெறச்செய்வதில் இவ்வாய்வு உந்துசக்தியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :** நூலகம், பல்கலைக்கழக மாணவர்கள்

**அறிமுகம் :**

இன்றைய நவீன காலத்தில் தகவல்களே மிகப்பெரிய செல்வங்களாக மதிக்கப்படுகின்றன. இந்த தகவல் செல்வங்களை வழங்கும் முதன்மை நிலையங்களில் நூலகத்திற்கு தனியிடம் உண்டு. ஆரம்ப காலத்தை விட இன்று நூலகங்களின் பெறுமதி முக்கியத்துவமடைந்துள்ளன. தகவல்களை ஒரே இடத்தில் பெற முடியுமாக இருக்கும்வகையில் நூலகங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

ஒரு நாட்டின் உயிர்நாடியாக அந்நாட்டின் பல்கலைக்கழகங்கள் அறியப்படுகின்றன. மேலும் ஒரு நாட்டினுடைய தேசிய மூலதனமாக பல்கலைக்கழகங்களே உள்ளன. இந்தவகையில் பல்கலைக்கழகங்கள் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அச்சமூக மக்களுக்கு கல்வி வழங்குவதன் மூலம் அச்சமூகத்தின் பண்பாட்டு மரபினை வளர்க்கின்றன. (செனவிரட்ன டி, 2006) இவை நாட்டிற்கு புத்திஜீவிகளை உருவாக்கிவிடுவதில் பெரும் பங்களிப்பு செய்கின்றன. இங்குள்ள மாணவர்களின் அறிவுக்கு விருந்தாக அமைவதில் விரிவுரை மண்டங்களை அடுத்து நூலகங்களுக்கு முதன்மை இடம் வழங்கப்படுகின்றது. குறிப்பாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பணிசெய்வதில் இவை கரிசனை கொள்கின்றன. நூலகங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டும் மாணவர்கள் அங்கிருந்து தங்கள் திறன்களை, ஆளுமைகளை வளர்ப்பதற்கான வழிகாட்டல்களை தங்களின் வாசிப்பினூடாக பெற்றுக்கொள்கின்றனர்.

இவ்வாறு மாணவர்களுக்கு அறிவுத்தகவல்களை வழங்குவதில் முன்னிலை வகிக்கும் பல்கலைக்கழக நூலகங்கள் அதன் கட்டமைப்பிலும், உட்பொதிவுகளிலும் சிறப்பாக அமையப்பெற்றிருப்பது காலத்தின் தேவையாகும். அதாவது வாசகனொருவனை திருப்திபடுத்தும் வகையில் அதன் சூழலும், நூற்களும், இன்னபிற எழுத்தாக்கங்களும் காணப்பட வேண்டும். குறிப்பாக கற்றலுக்கேற்ற அமைதியான சூழலையும் பெற்றிருப்பது அவசியமாகும். இவ்வாறான முக்கியமான அடைவுகள் அமையப்பெறும்போது குறித்த நூலகம் வாசகர்களுக்கு உச்சபயனை வழங்கும்.

பொதுவாக பல்கலைக்கழகங்கள் எனும்போது அங்கு நூலகங்கள் பிரத்தியேகமாக இருப்பது அவசியமாகும். இவ்வாறு பல்கலைக்கழக நூலகங்களின் முக்கியத்துவம் உணரப்படும் போது அவற்றை பயன்படுத்துவதை விட்டும் மாணவர்கள் கவனயீனமாக இருப்பதாக அறியமுடிகின்றது. மேலும் பல்கலைக்கழக நூலகங்கள் போதியளவு வசதிகளை பெற்றிருந்தாலும் அவற்றை பயன்படுத்துபவர்களின் வீதம் கணிசமாக குறைவடைந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இன்று நூலகங்களின் பயன்பாடு பற்றி அதிக அக்கறை கொள்ளாதவர்களாக மாணவர்கள் பட்டம்பெற்று செல்கின்றனர். பட்டம் பெற்று வெளியாகும் மாணவர்களின் தரத்தை, ஆளுமைளை உருவாக்குவதில் முன்னிலை வகிக்கும் நூலகங்களை பயன்படுத்துவதில் மாணவர்களின் நிலைப்பாட்டை மதிப்பீட்டாய்வு ரீதியாக முன்வைக்க இவ்வாய்வு முனைகின்றது. நூலகப்பயன்பாடு மந்தமாயிருக்கும் இக்கால கட்டத்தில் இவ்வாறானதொரு ஆய்வு மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையை உணர்ந்து செய்யப்படுவதாக அமைகின்றது.

**ஆய்வின் முக்கியத்துவம் :**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆளுமைகளை, திறமைகளை வளர்ப்பதற்கு, வெளிக்கொண்டு வருவதற்கு நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன. ஆனாலும் இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் மென்பிரதி (Softcopy) மூலம் தகவல்களை பெற விளைவதன் காரணமாக நூலகம் சென்று புத்தகம் வாசிக்கும் பழக்கம் வெகுவாக குறைந்துவிட்டது. தேவையான தகவல்களை மாத்திரம் இணையம் மூலம் தேடிப்பெற்றுக்கொள்கின்றனர். இதனால் மாணவர்களுக்கும், புத்தகங்களுக்கும் இடையிலான தொடர்பு துருவங்களாக இருக்கின்றன. இந்த நிலைமை தொடருமாயின் ஆளுமைமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியாத நிலைமை உருவாகும். பட்டம் பெற்று வெளியாகிய பின்பும் ஆக்கபூர்வமான சேவைகளை அவர்களால் சமூகத்திற்கு வழங்கமுடியாமல் போகின்றது. இந்தவகையில் பல்கலைக்கழக மாணவர்களை நூலகத்துடன் நெருங்கிய தொடர்பை பேண வைக்க முயல்வது அவசியமாக மாறியிருக்கும் வேளையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் கற்றலுக்கு துணைபுரியும் வசதிகள் காணப்படினும் அதனை பயன்படுத்தும் மாணவர்களின் வீதம் குறைவாக காணப்படுவதை அவதானித்து

இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்க இச்சிறு ஆய்வும் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆய்வுப்பிரச்சினை :**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொது நூலகம் மாணவர்களின் நலன்கருதி பல்வேறு வசதிகளை கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும், மாணவர்கள் அதனை பயன்படுத்தி பிரயோசனமடைவதை விட்டும் கவனயீனமாக இருப்பதுடன், அதன் பெறுமதியை உணராதவர்களாக பட்டம் பெற்று செல்கின்றனர். இந்தவகையில் இவ்வாய்வானது நூலகத்தை பிரயோசனமாக பயன்படுத்த மாணவர்களை ஊக்கப்படுத்த எத்தணிக்கின்றது.

**ஆய்வு நோக்கங்கள் :**

- பொது நூலகத்துடனான மாணவர்களின் தொடர்பை மதிப்பீட்டு ரீதியாக வெளிக்கொணரல்
- சிறந்த முறையில் நூலகத்தை பயன்படுத்த வழிகாட்டல் வழங்குதல்

**ஆய்வுப்பிரதேசம் :**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொது நூலகத்தை மையப்படுத்திய ஆய்வு என்பதால் அனைத்து பீடங்களையும் சேர்ந்த முன்னூறு மாணவர்கள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல் :**

இவ்வாய்வானது முதற்தர, இரண்டாம் தர தரவுகளை ஆய்வின் மூலகங்களாக கொண்டு தரம்சார், பண்புசார் ஒப்பீட்டாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல்நிலைத்தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம், நேர்காணல் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் நூற்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் மூலமும் பெறப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு :**

நிஸ்மியா ஏ.எச்.எப். (2013) என்பவர் கலாநிதி. எம்.ஐ.எம். ஜெஸீல் அவர்களின் மேற்பார்வையின் கீழ் ''தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் இஸ்லாமிய கற்கை நெறியைப்பயிலும் பட்டதாரி மாணவர்களின் தகவல் சேவையை நிறைவு செய்கின்றதா?: ஒரு விமர்சன மதிப்பீட்டு ஆய்வு'' எனும் தலைப்பில் ஆய்வொன்றை செய்துள்ளார். இவ்வாய்வில் இஸ்லாமிய கற்கை நெறியை பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு தகவல் சேவை ஓரளவு நிறைவுசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் நூலக சேவைகளின் விஸ்திரப்புக்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

செனவிரட்ன டி (2006) என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நூலகமென்பது ஒரு சேவை நிறுவனாகும். நிறுவனமென்ற வகையில் வாடிக்கையாளர்களின் அபிப்பிராயத்தை அறியவிரும்புவது இயல்பாகும். இத்தோரணையில் பட்டதாரிகளை உருவாக்கும் பல்கலைக்கழக நூலகங்கள் பற்றிய ஆய்வுகள் இடம்பெறுவது வழமையாகும். இதன்மூலம் நூலக குறைபாடுகள் தீர்க்கப்படுவதுடன், வாசகர்களின் திருப்தி நிலையும் அறியப்படுகின்றது என கூறப்பட்டுள்ளது.

சந்திரசேகர் மற்றும் கோமதி முருகதாஸ் (2012) ஆகியோரால் யாழ்ப்பாண பல்கலைக்கழக உயிரியல் துறை மாணவர்களின் வாசகர் திருப்தி தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. கற்றல் மற்றும் ஆய்வு செயற்பாடுகளுக்கான மூலமாக நூலகம் அமைந்திருப்பதாக இவ்வாய்வு முடிவு கூறுகின்றது.

சிவதாஸன் (2013) மூலம் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்தின் முகாமைத்துவ பீட மாணவர்களை அடிப்படையாக கொண்டு செய்யப்பட்ட ஆய்வில் வாசகர் திருப்தி நிலை அடையப்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

குணசேகரா சீ. (2010) மூலம் பேராதனை பல்கலைக்கழக பிரதான நூலகத்தை மையப்படுத்திய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாய்வின் சிபாரிசுகளாக தகவல் அறிதிறன் தொடர்பான நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இலத்திரனியல் தகவல் வளங்களை பயன்படுத்த வாசகருக்கு தகவல் அறிதிறன் பயிற்சி வழங்கப்பட வேண்டும், இலத்திரனியல் தகவல் வளங்களின் ஈட்டலை அதிகரிக்க வேண்டும் என்பன முன்வைக்கப்பட்டன.


Goel NK, Sarpal, Abhiruchi, Abhadeep (2012) ஆகியோர் மூலம் வட இந்தியாவிலுள்ள மருத்துவக்கல்லூரி ஒன்றின் நூலகத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாசகர்களின் பயன்பாடு தொடர்பானதில் 71% வீதமானவர்கள் நூலகம் வருவதற்கான தேவை பூர்த்தி செய்யப்படுவதாகவும், 57% வீதமானோருக்கு கணனி மூலம் தகவல்களை தேடுவது இலகுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும், கலந்துரையாடல்களும் :**

இவ்வாய்வின் நோக்கமான நூலகத்துடனான மாணவர்களின் தொடர்பை ஒப்பீட்டு ரீதியாக வெளிக்கொண்டு வருதல் தொடர்பான விடயத்தில் பின்வரும் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன.

நூலகத்தில் தேவையான புத்தகங்களை பெற்றுக்கொள்ள முடிகின்றது.


ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களிடம் இவ்வினா தொடுக்கப்பட்ட போது 69% வீதமானவர்கள் முழுமையாக உடன்படுவதாகவும், 27% வீதமானோர் உடன்படுவதாகவும், மிகக்குறைவானவர்களே (4%) உடன்படவில்லை எனவும் தெரிவித்தனர். இந்தவகையில் நூலகத்தில் கற்றலுக்கு தேவையான புத்தகங்களை 96% வீதமானோர் பெற்றுக்கொள்வதில் உடன்படுகின்றனர் என்பதை உரு (1) காட்டுகின்றது.




உரு (1)

நூலகத்தில் கற்பதற்கான சிறந்த சூழலை பெற முடிகின்றது

பல்கலைக்கழக நூலகமானது பரந்தளவு இடவசதியை கொண்டிருப்பதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதை உரு (2) மூலம் அறியலாம்.




**உரு (2)**

இதில் மிக அதிகமானோர் (99%) உடன்படும் அளவுக்கு நூலக வசதி அமையப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நூலக வைபை (wifi) எனது கற்றலுக்கு பெரிதும் உதவியாக இருக்கின்றது.

தொழில்நுட்ப வசதிக்கேற்ப கற்றல் செயற்பாடுகளை, தகவல் பெறுதலை இலகுபடுத்த அமைக்கப்பட்ட wifi 94% வீதமானவர்களின் கற்றலுக்கு பெரிதும் உதவியாக இருப்பதை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும் wifi மூலம் அதிக நேரங்களை கற்றலுக்காக மாத்திரம் பயன்படுத்துபவர்கள் 12% வீதமாக காணப்படும் அதேவேளை கற்றலுக்காகவும் பயன்படுத்துவோர் 54% வீதமாக காணப்படுகின்றது. மறுபுறம் கற்றலுக்காக அதிக நேரம் செலவிடாதவர்கள் 1/3 வீதமாக காணப்படுகின்றனர் என்பவற்றை அட்டவணை (1) காட்டுகின்றது.

அட்டவணை (1)

| | முழுமையாக உடன்படுகின்றேன் | உடன்படுகின்றேன் | உடன்படவில்லை |
|---|---|---|---|
| நூலக வைபை எனது கற்றலுக்கு பெரிதும் உதவியாக இருக்கின்றது | 66% | 28% | 6% |
| வைபை மூலம் அதிக நேரங்களை கற்றலுக்கு செலவிடுகின்றேன் | 12% | 54% | 34% |

இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொண்ட போது


தகவல்களை பெற wifi ஐ பயன்படுத்த நூலகம் வரும்போது, ஆரம்பத்தில் சிறிதுநேரம் தேடுதலில் ஈடுபட்ட பின் இன்னபிற விடயங்களின் பால் உள்ளுணர்வு உந்தப்பட்டு அவ்வாறே வருகைதந்த நோக்கம் மறக்கடிக்கப்படுகின்றது.

இங்குள்ள இணைய வசதிகளை பரீட்சைக் காலங்களிலேயே கற்றலுக்கு கூடுதலாக பயன்படுத்த முடிகின்றது.

கற்றலுக்காக இணைய வசதியை உபயோகிப்பதை விட வேறு விடயங்களுக்காக பயன்படுத்துவது விருப்பமாக உள்ளது.

நூலகத்தில் பணிபுரிகின்றவர்கள் அழகிய முறையில் நடந்துகொள்கின்றனர்


நூலகத்தை நாடிச்செல்ல உந்துசக்தியாக அமைகின்ற பணியாளர்களின் சிறந்த தொடர்பாடல் பற்றிய வினாவுக்கு உரு (3) பதிலாக அமைந்தது.





உளரு (3)

நூலக உறுப்பினராக இருப்பதை அதிகம் விரும்புகின்றேன்.

நூலகத்தை பயன்படுத்துவதில் அதிக பயன்கள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளும் மாணவர்கள் நூலக உறுப்பினராக இருப்பதை விரும்பும் அதேவேளை நடைமுறையில் உறுப்பினராக இருப்பதை நிறைவேற்ற முடியாமல் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இதனை உரு (4) மற்றும் உரு (5) மூலம் அறியலாம்.




**உரு (4)** **உரு (5)**

இவ்விரு உருக்களின் படி நூலக உறுப்புரிமையை விரும்பாதவர்கள் வெறும் 1% வீதம் காணப்படும் அதேவேளை நூலக உறுப்பினராக இல்லாதவர்கள் 13% வீதமானோர் காணப்படுகின்றனர். நூலக உறுப்பினராக இல்லையென அறியப்பட்ட சிலரிடம் கலந்துரையாடல் மேற்கொண்ட போது.


வாசிப்புப்பழக்கம் இல்லை. புத்தகங்களை எடுத்து வாசிப்பதில் ஆர்வமில்லை.

பரீட்சைகளுக்கு தேவையானவற்றை சகபாடிகளிடமிருந்து பிரதி எடுத்துக்கொள்வது போதுமானதாக உள்ளது.

இணைய வசதிக்காக மாத்திரம் நூலகம் வரக்கிடைக்கின்றது.


பல்கலைக்கழக நூலகமானது மாணவனொருவனுக்கு போதுமானளவு வசதிகளை கொண்டிருப்பதை மேற்கூறப்பட்ட ஆய்வு வினாக்கள் மூலம் அறியமுடிகின்றது. இத்தருணத்தில் அதனை பயன்படுத்தும் மாணவர்களின் நிலைப்பாடுகள் பற்றி கரிசனை மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையிருக்கின்றது. இந்தவகையில் நூலகத்திற்கு வருகைதரல் குறித்து வினா தொடுக்கப்பட்ட போது உரு (6) பெறுபேறாக அமைந்தது.

உரு (6)




இதில் 1/6 வீதமானவர்களே தினமும் நூலகத்திற்க வருகை தருவதாக தெரிவித்தனர். மேலும் 4/6 வீதமானோர் வாரத்திற்கு ஓரிரு முறை வருகின்றனர். ஏனையோர்கள் மாதத்திற்கு ஓரிரு தடவைகளும், இன்னும் வருகை தராதவர்களாகவும் உள்ளனர். அடுத்து, இங்கு வருகை தருபவர்கள் நூலகத்தை பயன்படுத்தும் கால அளவை மதிப்பிட்ட போது உரு (7) பெறுபேறாக அமைந்தது.

உரு (7)




இதில் 1-30 நிமிடங்கள் வரை சுமார் 2/3 பெரும்பான்மையானோர் காலத்தை கழிக்கும் அதேவேளை மீதமுள்ள 1/3 வீதமானோர் 30-90, 90-120 நிமிடங்கள் நூலகத்தில் நேரத்தை செலவிடுகின்றனர். குறைந்த நேரம் அதிகளவு பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் பற்றிய கலந்துரையாடிய போது


பரீட்சைக் காலங்களிலேயே அதிக நேரம் கழிக்க நேரிடுகின்றது. ஏனைய காலங்களில் இணையத்திற்காகவும், புத்தகங்களை இரவல் பெறவுமே வர முடிகின்றது.

நூலகத்தில் அமர்ந்து புத்தகங்களை வாசிக்க மனம் இடமளிப்பதில்லை. இதனால் இங்கு நேரம் கழிப்பது கடினமாக உள்ளது.

இதுவரை இரவல் பெற்ற புத்தகங்களின் தொகை (அண்ணளவாக)

பல்கலைக்கழக நூலகம் பல்லாயிரம் நூற்களை சுமந்திருக்கும் வேளையில் அவற்றை இரவல் பெறும் மாணவர்கள் குறைந்தளவு புத்தகங்களையே (பாடப்புத்தகங்களையே) இரவல் பெறுகின்றனர் என்பதை உரு (8) விபரிக்கின்றது.

உரு (8)




புத்தகங்களை பெற சலுகைகள் செய்யப்பட்டிருந்தாலும் அவற்றை இரவல் பெறுவதில் மந்தநிலை காணப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் 1-15 வரையான புத்தகங்களையே இரவல் பெற்றிருக்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசித்த போது

இரவல் பெற்ற புத்தகத்தை வாசித்து முடிக்க நேரம் இடமளிக்காமை.

புத்தகங்களை திருப்பிக் கொடுப்பதிலுள்ள தாமதம்.

பாடவிதான புத்தகங்களையே இரவல் பெற விரும்புகின்றமை.

புத்தகங்கனை வாசிக்க நேரம் ஒதுக்க முடியாமை.

இவ்வாறு பல்கலைக்கழக நூலகத்தையும், பல்கலைக்கழக மாணவர்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது பல்கலைக்கழக நூலகமானது தேவையான புத்தகங்களையும், சிறந்த சூழலையும், கற்றலுக்கு உதவுகின்ற இணைய வசதிகளை கொண்டிருக்கின்ற போதிலும் நூலகத்திற்கு வருகை தருவதில், நேரம் கழிப்பதில், புத்தகங்களை இரவல் பெறுவதில் மாணவர்கள் கவனயீனமாக செயற்படுகின்றனர் என்பதை அறியமுடிகின்றது.

**முடிவுரை:**

பல்கலைக்கழக நூலகம் கற்றலுக்கான போதியளவு வசதிகளை கொண்டிருப்பினும் அதனை பயன்படுத்தி பிரயோசனமடைவதை விட்டும் மாணவர்கள் கவனயீனமாக இருக்கின்றனர் என்பது இவ்வாய்வின் முடிவாக முன்வைக்கப்படுகின்றது. மேலும் இவர்களுக்கான சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் நூலகத்தை சிறந்த முறையில் பயன்படுத்த முனையலாம்.

**பரிந்துரைகளும், வழிகாட்டல்களும் :**

- நூலகப்பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வுகள், கருத்தரங்குகள், ஆய்வுகள் அதிகமதிகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- நூலகத்தின் பால் மாணவர்களை கவர்வதற்காக போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தப்படல் வேண்டும்.
- நூலகப்பயன்பாட்டாளர்களை ஊக்குவிக்கும் முகமாக சான்றிதழ்கள், வெகுமதிகள் வழங்குதல்.
- நூற்களை பாதுகாப்பதன் அவசியத்தை விளங்கப்படுத்தலும், வன்பிரதி (Hard Copy) மூலம் வாசிப்பதன் அநுகூலங்களை தெளிவுபடுத்தலும்.

- பாடவிதானத்தில் நூலக கற்கையை கட்டாயப் பாடமாக சேர்க்கப்படல் வேண்டும்.
- பட்டதாரி மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்துவதன் அவசியத்தை விரிவுரைகளில் அலசுவதுடன், நூலகப்பயன்பாடு கவனயீனமாக பார்க்கப்படும் போது ஏற்படும் சமூக எதிர்விளைவுகளை புரியவைத்தல்.
- சிறந்த ஆளுமைகளாக மாற நூலகத்தின் வகிபாகத்தை தெளிவுபடுத்தல்.
- தொழிற்சந்தையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள இத்துறைசார் கற்கைகளை தொடரல்.

**உசாத்துணைகள் :**


- திருமதி மைதிலி விசாகரூபன் (2005), "இலங்கையில் நூலகச்சட்டங்கள்", மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- பெருமாள், பா. (2002), "உலக நூலகங்கள்", மணிபாசகர் பதிப்பகம், சென்னை.
- விவேகானந்தன், வை. (2005), "அறிவுலக சொத்துரிமைச்சட்டமும் உலகமயமாதலில் நூலக தகவல் விஞ்ஞான அபிவிருத்தியும்", டெக்னோ பிறின்டிங், கொழும்பு.
- விமலாம்பிகை பாலசுந்தரம் (2014), "நூலகவியலில் பட்டியலாக்கம்", குமரன் புத்தக நிலையம், சென்னை.
- நிஸ்மியா ஏ.எச்.எப். (2013) என்பவர் கலாநிதி. எம்.ஐ.எம். ஜெஸீல் அவர்களின் மேற்பார்வையின் கீழ் "தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் இஸ்லாமிய கற்கை நெறியைப்பயிலும் பட்டதாரி மாணவரிகளின் தகவல் சேவையை நிறைவு செய்கின்றதா?: ஒரு விமர்சன மதிப்பீட்டு ஆய்வு", Colloquium of Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- Goel NK., Sarpal Galhotra and Abhiruchi, Adhadeep (2012), "A study about library usage by undergraduate medical students in a medical college in North India", Journal of Community Medicine.
- Gunasekara, Chamani (2010), "Students' usage of an academic library: a user survey conducted at the main library university of Peradeniya", Journal of the University librarians association of Sri Lanka.
- Krishan Kumar (2001), "Library Manual", Vikas Publishing House (Pvt) LTD,New Delhi.
- Seneviratna, Daisy (2006), "Measuring user satisfaction: a case study at the PGIM branch library at Peradeniya", Journal of the University librarians association of Sri Lanka.
- Sivathasan, N. (2013), "Impact of library collections on user satisfaction: a case study", European journal of business and management.